பெண்களின் கொள்கை விளக்க அறிக்கை

2005/6

சமாதானம்	அரசியல்	சட்டம்
வன்முறை	பொருளாதாரம்	ஊடகம்
உடனலம்	கல்வி	பண்பாடு

பெண்வாக்காளர்களே!

- நீங்கள் நாட்டின் முழு வாக்காளர் எண்ணிக்கையில் அரைப்பற்றினர்.

கீழ்க்காணப்படும் கோரிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி உங்கள் வேட்பாளரிடம் கேளுங்கள்.

1. நாடாளுமன்ற உள்ளூராட்சி தேர்தல்களின் போது வேட்பாளர் பட்டியலில் பெண்களுக்கு 30% ஒதுக்கீடு.

2. தேசியப் பட்டியலில் பெண்களுக்கு கூடுதல-ான பங்கு

3. சமாதான நடவடிக்கைகளில் பெண்களுக்கு அதிக பங்கு.

பெண்கள் கொள்கை பிரகடனத்தை வாசியுங்கள்.

மகளிர் அரசியல் வட்டம்

12, சுலைமான் ரெறஸ், கொழும்பு - 5

தொலைபேசி : 2501339, 2504623, 2586400

பெண்களின் கொள்கை விளக்க அறிக்கை 2004

இருபதாம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தங்களில் இலங்கைப் பெண்களின் வாழ்வில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மேலும் சட்டங்களிற் சீர்திருத்தம், பெண்களின் பொருளாதார சமூக அந்தஸ்தில் முன்னேற்றம் காணல் மற்றும் சமூகத்தின் பல துறைகளிடையே பால்நிலை விழிப்புணர்வு அதிகரிப்பு என்பவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. பெண்களின் எழுத்தறிவு கிட்டத்தட்ட 90% வீதத்தை எட்டியுள்ளது. பெண்கள், பொதுவாழ்க்கையில் முன்னெனப்போதும் இல்லாத அளவு பிரவேசித்துள்ளார்கள். இலங்கைதான் உலகின் முதற் பெண் பிரதமரையும், ஜனாதிபதியையும் பெற்றுக் கொண்டது. மிக அண்மையில் முதலாவது பெண் உபவேந்தர், உயர்நீதிமன்ற நீதிபதி, அமைச்சின் செயலாளர் எனப் பெண்கள் இந்நாட்டில் பதவியேற்றுள்ளனர். அரச பணித்துறை, தனியார்துறை, மருத்துவம், சட்டம், கலை போன்ற பல துறைகளிற் பெண்கள் இங்கே முக்கிய பங்காற்றுகின்றனர். குறைத்தேர்ச்சிபெற்ற, தேர்ச்சி பெறாத பணிகளில் ஈடுபடும் பெண் ஊழியரின் விகிதத்திலும் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது.

வறுமையின் சுமைகளைத் தாங்குவதோடு, பல்வேறு வகையான பொருளாதார சுரண்டல், அரசியலில் இருந்து ஒதுக்கப்படுதல், சட்ட பாரபட்சம், சமூக அடக்குமுறை என்பவற்றிக்குப் பெண்கள் இன்னமும் முகங்கொடுக்க வேண்டியுள்ளார்கள். இதற்கு மேலும், பெண்களுக்கெதிரான வன்முறை, ஆணாதிக்க நடைமுறை, பெண்கள் தொடர்பான பாரம்பரிய மனப்பாங்கு என்பன இன்னமும் நிலவிவருகின்றன.

மேலும், தேர்தற் காலங்களின்போது பெண்கள் வன்முறைகளையும், அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளமையால் அநேக சந்தர்ப்பங்களில் அவர்கள் சுதந்திரமாகவும், முழுமையாகவும் பங்கேற்க முடியாத வண்ணம் தடுக்கப்படுகிறார்கள். இனப்பிரச்சினை ஏற்படும் காலங்களில் போரினாற் பெண்களும் சிறார்களும் தம் குடும்பத்திலுள்ள ஆண் உறவினர்களை இழப்பது மட்டுமல்லாமல் இடம்பெயர்ந்தோரில் அவர்கள் 80% ஆகவும் இருக்கின்றனர். இவர்கள் அடிக்கடி வன்செயல்,தொந்தரவு என்பவற்றிற்குப் பலியாகின்றவர்களாகவும் இருக்கின்றனர்.
சனத்தொகையில் அரைப்பங்கினராகப் பெண்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு 1931ஆம் ஆண்டிலிருந்தே வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டிருந்தபோதும் கூட,இலங்கையின் ஆட்சி அமைப்பின் சகல மட்டங்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் மிக மிகக் குறைவாகவே காணப்படுகிறது. 1994ஆம் ஆண்டு

நாடாளுமன்றத்தில் இவர்களின் தொகை 4.8% ஆக இருந்து, 2000இல் 4% ஆகக் குறைந்து, பின்னர் 2001இல் அது 4.5 % ஆக சற்று ஏற்றம் கண்டுள்ளது.

பெண்களுக்கு 30% ஒதுக்கீடு செய்தல் சம்பந்தமாக பலர் பிரசாரங்கள் மேற்கொண்டு வந்தபோதிலும் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் அக்கோரிக்கையைப் பொருட்படுத்தாது விட்டுள்ளன. 2003இல் தேர்தல் சீர்திருத்தம் சம்பந்தமான ஆலோசனைகளை ஆராயும் பொருட்டு நிறுவப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் மகளிர் சார்பாக செயற்படும் குழுக்களும் மகளிர் விவகார அமைச்சும் பெண்களுக்கென ஓர் ஒதுக்கீடு வேண்டுவது பற்றி வலியுத்தியது.

வாக்காளர்களின் அரைப்பங்கினர் பெண்கள் என்பதால், தேர்தற் காலங்களில் பெண்களின் வாக்குப்பலம் பெரிதும் உணரப்படுவதோடு, தேர்தலில் வெற்றிக்கு அவர்கள் முக்கிய காரணிகளென்பதும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பெண்கள்,வாக்காளர் என்ற நிலையில் இருந்தாலுங்கூட தேர்தற் பிரசாரங்களின்போது, பெண்களின் நல்வாழ்வுக்கான கோரிக்கைகளை வேட்பாளர்களும், பொதுமக்களும் புரிந்துகொள்ளும் வகையில் அவர்களது பிரக்ஞையைத் தட்டியெழுப்புவது அவசியமாகும். வெளிநாட்டில் தொழில்புரியும் தொழிலாளருக்கு - இவர்களில் அநேகர் பெண்கள் - வாக்குரிமை மறுக்கப்படுவது வாக்களிப்பு மட்டத்தில் இழைக்கப்படும் மற்றுமோர் அநீதியாகும்.

பெண்களைப் பாதிக்கும் பல பிரச்சினைகளை முன்வைப்பதற்கும், சமாதான செயற்பாடு உட்பட தேசிய, சர்வதேசிய நலன் சார்ந்த விடயங்களில் பால்நிலை சார்ந்த நிலைப்பாட்டை எடுத்துக் காட்டுவதற்கும் நாடாளுமன்றம், உள்ளூராட்சி சபைகள் என்பவற்றில், குறிப்பாகத் தீர்மானம் மேற்கொள்ளும் மட்டங்களில் அதிக எண்ணிக்கையில் பெண்கள் இடம்பெறவேண்டிய தேவை உள்ளது.

இத்தகைய தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு, பல மகளிர் நிறுவனங்கள் ஒன்றிணைந்து பின்வரும் பெண்களின் கொள்கை விளக்க அறிக்கையைத் தயாரித்துள்ளன.

2004ஆம் ஆண்டிற்குரிய பெண்களின் கொள்கை விளக்க அறிக்கையை சிங்களம்,தமிழ்,ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பெற்றுக் கொள்ளலாம். எழுதுங்கள்: பெண்களுக்கான அரசியல் வட்டம் 12, சுலைமான் ரெறேஸ்,கொழும்பு-5 தொ. பே.இல:2501339 அல்லது 2504623, 2586400

அரசியல்

சுறுசுறுப்பான ஏற்பாட்டாளர்களாகவும் பிரசாரகர்களாகவும் பெண்களை ஈடுபடுத்தும் பொருட்டு தேர்தல் காலங்களில், அவர்களுடைய அரசியல் பங்களிப்பு முக்கியமாகத் தேடப்படுகிறது. ஆனால், சில பெண்களுக்கே வேட்பாளர் நியமனம் வழங்கப்படுகிறது. 1994ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டோரில் 11 பேர் மட்டுமே பெண்கள், அதாவது மொத்த 225 அங்கத்தவர்களில் அது 4.8% ஆக மேலும் வீழ்ச்சியை அடைந்தது. 2001ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் 10 அல்லது 4.5% பெண்கள் அங்கம் வகித்தனர். பங்களாதேஷைத் தவிர்த்துப் பார்க்கும்போது தெற்காசியப் பிராந்தியத்திலே இதுவே கடைசிப் படிநிலையாகும். இந்திய லோக்சபாவில் 83%, பாகிஸ்தானியப் பேரவையில் 20%, நேபாலின் பிரதிநிதிகள் சபையில் 5.8% பெண்கள் அங்கம் வகிக்கின்றனர். ஆப்கானிஸ்தானினது புதிய அரசியலமைப்பு பெண்களுக்கென 25% ஒதுக்கீட்டைக் கொண்டிருக்கும்.

ஸ்ரீலங்காவில் மாகாணசபை மட்டத்தில், 1993ஆம் ஆண்டுத் தேர்தலுடன் 1999ஆம் ஆண்டை ஒப்பிடும்போது, தெரிவுசெய்யப்பட்ட பெண் அங்கத்தவரின் எண்ணிக்கை 12(3.1%) லிருந்து 13(3.4%) ஆக ஒரேயொரு பெண் அங்கத்தவரால் மட்டுமே உயர்ந்துள்ளது. அப்படி இருந்துங்கூட, இத்தேர்தலைத் தொடர்ந்து, ஊவா, வடமத்திய மாகாணசபைத் தேர்தலில தேர்ந்தெடுக்கப்பட்ட இரு பெண் உறுப்பினர்களும் தமது கணவன்மாருக்கு இடமளிக்கும் பொருட்டு ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து அவ்விருவரின் கணவன்மாரும் முதலமைச்சர் பதவி-யை ஏற்றனர். இதன் விளைவாகத் தற்போது மாகாணசபைகளில் 11(3%) பெண் அங்கத்தவரே உள்ளனர். தேசிய மற்றும் மாகாண சட்டமன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் மிக மிகக் குறைவாக இருந்தபோதும், உள்ளூராட்சியில் இவர்களுடைய வகிபாகம் இன்னும் மோசம் அடைந்துள்ளமை துரதிர்ஷ்மே. கடந்த காலத்தில் நடந்த மூன்று உள்ளூராட்சித் தேர்தல்களில் (மார்ச் 1997),பெண் அங்கத்தவர்களின் விகிதமானது, மாநகரசபைகளில் 3.4% ஆகவும், நகரசபைகளில் 2.6% ஆகவும், பிரதேசசபைகளில் 1.7% ஆகவும் இருந்துள்ளன.

கடந்த 2002ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் மொத்தம் 3,825 ஆண்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். எனினும், சகல உள்ளூராட்சியிலும் அங்கம்வகிக்கும் பெண்களின் எண்ணிக்கை 77 அல்லது 1.7ஆக மட்டுமே இருந்தது. தெற்காசியப் பிராந்தியம் முழுவதுடன் ஒப்பிட்டு நோக்கின் இதுவே ஆகக் குறைந்த விகிதமாகும். இந்தியா 33.33% ஆகவும், பாகிஸ்தான் 30.12% ஆகவும் பங்களாதேஷ் 23.31%ஆகவும், நேபாளம் 8.5% ஆகவும் பெண் அங்கத்தவர்களைக் கொண்டிருந்தன.

இத்தகைய சலிப்பூட்டும் சூழ்நிலை இலங்கையில் நிலவுவதன் காரணமாகப் பின்வருவனவற்றை நாம் பரிந்துரை செய்கிறோம் :

1. (அ) மாகாணசபைகள், உள்ளூராட்சி என்ற மட்டங்களில் அதாவது, பிரதேசசபைகள், மாநகரசபைகள், நகரசபைகளில் குறைந்த பட்சம் 30% பெண்களுக்கு ஒதுக்கீடு செய்தல்.

   (ஆ) நாடாளுமன்றத்திற் பெண்களுக்கு குறைந்த பட்சம் 30% ஒதுக்கீடும், தேசியப்பட்டியல் நியமனத்தில் 50% பெண்களும் இருத்தல்வேண்டும்.

2. அதிக பெண்கள் அமைச்சர்களாகவும், பிரதி அமைச்சர்களாகவும், மந்திரிசபை அமைச்சர்களாகவும், அமைச்சின் செயலாளர்களாகவும், நிறுவனங்களின் தலைவர்களாகவும் இருப்பதோடு சட்டத்துறையிலும் அதிக பெண்கள் இருத்தல்.

3. சகல மட்டங்களிலும் அரசியல் அமைப்புக்களில் குறைந்த பட்சம் 30% பெண் வேட்பாளர்களை அரசியற் கட்சிகள் நியமிக்கவேண்டும்.

4. பெண் வேட்பாளர்களுக்குத் தகுந்த பயிற்சியையும் ஏனைய ஆதரவையும் அளித்தல். நாடாளுமன்றத்திலும் உள்ளூராட்சியிலும் பெண்கள் கூடிய செயற்திறனுடன் இயங்குவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளலும் ஏனைய உதவிச் சேவைகள் வழங்கலும்.

5. உள்ளூராட்சி அதிகாரங்களுக்கான தேர்தலில் இளைஞர்களுக்கான 40% ஒதுக்கீட்டில் அரைப்பங்கு வேட்பாளர்கள் பெண்களாய் இருத்தல்.

6. சட்டவாக்க அமைப்புகளில் பெண்கள் பிரச்சினைகளைக் குவிமையப்படுத்தும் பொருட்டு கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டுத் தீர்மானித்துச் செயற்படும் பெண்கள் குழுக்களை நிறுவுதல்.

7. அரசியலிலும் தீர்மானம் மேற்கொள்ளும் பதவிகளிலும் இன்னும் அதிக எண்ணிக்கையிற் பெண்கள் வேண்டுமென்பதை ஊக்குவிக்கும் பொருட்டு நாடளாவிய ரீதியிற் பிரசாரம் செய்தல்.

8. வெளிநாடுகளிற் புலம்பெயர்ந்து தொழில்புரியும் இலங்கையர்களுக்கு வாக்குரிமை வழங்கல் (1 மில்லியன் பேர்கள் வரை உள்ளார்கள். இவர்களுள் பெரும்பாலானோர் பெண்கள்)

9. 2003ம் ஆண்டில் நிறுவப்பட்ட தேர்தற் சீர்திருத்தத்திற்கான நாடாளுமன்றத் தேர்வுக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட, பெண்கள் தொடர்பான விடயங்களை நடைமுறைப்படுத்தல்.

சனத்தொகையில் 50% இற்கு
மேலானோர் பெண்களே
வாக்காளர்களுள் 50% த்தினர் பெண்களே
என்னும்
நாடாளுமன்றத்தில் 4.5% பெண்கள் மட்டுமே
அங்கம் வகிக்கின்றனர்.

மாகாணசபைகளில் 3.4% பெண்கள் மட்டுமே
அங்கம் வகிக்கின்றனர்.

மாநகர சபைகள், நகரசபைகள், பிரதேச சபைகள்
என்பவற்றில் பெண்களின் அங்கத்துவம்
1.97% மட்டுமே

யுத்தத்தாற் பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் பெண்கள் வாழ்க்கைப் பிழைப்புக்கான திறன்களைப் புதிதாக அமைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. அவர்கள், பேச்சுவார்த்தை மூலம் எட்டப்பட்ட அமைதி நிலையை பெரிதும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். இருதரப்பிலும் மோதலினால் பாதிக்கப்பட்ட பெண்களது நலன்கள் சார்பாக செயற்படுதல் தேவையாய் உள்ளது. கொள்கை வரைதல், நடைமுறைப்படுத்தும் நுட்பங்கள் என்பவற்றில் பால்நிலைக் கூருணர்வுள்ள பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும். ஆயுதமேந்தப்பட்ட மோதல்களால் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டவர்கள் குடிமக்களே. அதிலும் குறிப்பாக அகதிகள், உள்நாட்டினுள் இடம்பெயர்ந்தவர்கள் என்ற வகையில் பெரும்பான்மையினராக பெண்களும் சிறார்களும் இருக்கின்றனர் என்பதை - பெண்கள், மோதல், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பான ஐ.நா. பாதுகாப்புச் சபையின் (2000ஆம் ஆண்டு ஒக்டோபர்) 1325ஆவது பிரேரணை - ஏற்றுக்கொள்கின்றது. மேலும் மோதலைத் தடுத்தல், தீர்த்தல், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் எனும் நடவடிக்கைகளில் பெண்கள் சம அடிப்படையிலும் முழுமையாகவும் பங்கேற்று ஈடுபடுவதன் முக்கியத்துவத்தையும் அது வலியுறுத்துகின்றது.

பின்வரும் யோசனைகளை நாம் முன்வைக்கிறோம்:

1. சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு உருவாக்கப்பட்ட நிறுவக அமைப்புகள், பால்நிலை விவகாரங்கள் தொடர்பாக கூருணர்வு கொண்டிருத்தல் வேண்டும். மேலும் கொள்கை வகுக்கும் மட்டத்திற் பெண்கள் பயனுறுதியுள்ள வகையில் பங்குபற்றுவதற்கான உறுதியான நடவடிக்கைகள் எடுத்தல்வேண்டும். பொருத்தமான செயற்றிட்டங்களை வரைந்து நடைமுறைப்படுத்தும் பொருட்டு அவர்கள் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள மகளிர் தேவை-களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளுடன் தொடர்புகொள்ளல் வேண்டும்.

2. சமாதானச் செயற்பாடுகளின்போது அரசியலமைப்பை உருவாக்கும்போதும் பால்நிலை சார்ந்த விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல்வேண்டும். பால்நிலை விவகாரங்களின்மீது கவனம்செலுத்துவதற்காக உபகுழு நியமிக்கப்பட்டமை என்ற விடயம், சமாதானச் செயல்முறையில் பெண்கள் பற்றிய விவகாரங்களை உள்ளடக்குவதற்கான தனிச்சிறப்பு

வாய்ந்த ஓர் முன்னோக்கிய அடியெடுப்பாகும். உபகுழுவிற்கும், அதன் பணிகளுக்கும் இயலுமானவரை முழுமையான ஆதரவை இருதரப்பினரும் வழங்கல் வேண்டும்.

3. சமாதானம், மீளமைப்பு என்பவை தொடர்பாகத் திரட்டப்பட்ட சகல தரவுகளும் பால்நிலை ரீதியாகத் தொகுக்கப்படல்.

4. மோதலினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் இடம்பெயர்ந்த பெண்கள், பெண் - பிள்ளைகளுக்கும் தொழில், கல்வி என்பவற்றிற்கான வழிவகைகளை மேம்படுத்துவதுடன் சகல வகையான தொல்லைகளில் இருந்தும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல்.

5. போர் விதவைகள் உட்பட மோதலினாற் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நலன்புரித் திட்டங்கள் வகுத்தல், அத்துடன் தொழில், தொழிற் திறன்களுக்கான பயிற்சிகளை வழங்குதல்.

6. இடம்பெயர்ந்த சகல பெண்கள், பெண்-பிள்ளைகளுக்கு இடையூறற்ற, பாதுகாப்புள்ள மீள்குடியமர்வுக்கான உரிமை.

7. யுத்தத்தால் சின்னாபின்னமாக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வரும் பெண்கள், பெண்-பிள்ளைகளது மனக்காயங்களை ஆற்றும் பொருட்டு ஆறுதல் அறிவுரைகள் வழங்குதல்.

8. யுத்தத்தாற் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இனவிருத்தி உடனலக்காப்பு சேவைகள் உட்பட சுகாதார சேவைகள் வழங்குதல்.

9. புனரமைப்பு, மீள்குடியேற்றத் திட்டங்களில் இல்லத்தின் தலைமையை ஏற்கும் பெண்களினதும், விதவைகளினதும் விசேஷ சூழமைவுகளைக் கருத்திற் கொண்டு அவர்களுக்கு காணி வழங்குதல் உட்பட அவர்களின் தேவைகளையும் நிறைவேற்றுதல்.

10. பெண்கள் குழுக்கள் வடக்கு, கிழக்கு தெற்கிற்கு இடையில் பயணம் மேற்கொள்வதையும், பெண்கள் சம்பந்தமான விடயங்களைக் கலந்துரையாடுதலையும் முன்னேற்றப்படுத்துதல்.



சட்டச் சீர்திருத்தம்

1995இல் பெண்கள் தொடர்பான குற்றவியற் சட்டத்தில் குறிப்பிடக்கூடிய அளவு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.பாலியற் தொந்தரவு குற்றமாகக் கொள்ளப்பட்டது; பாலியல் வல்லுறவுக்கான தண்டனைகள் அதிகரிக்கப்பட்டன; பாலியல் வல்லுறவுக்கான நியதிச் சட்ட வயதெல்லை 16ஆக உயர்த்தப்பட்டது; மேலும் திருமண வயது எல்லை 12 இலிருந்து 18 ஆகக் கூட்டப்பட்டது (முஸ்லிம்கள் தவிர). இது ஒரு படி முன்னேற்றமாக இருப்பினும், பொதுச் சட்டங்கள், மரபுவழிச் சட்டங்கள் ஆகிய இரண்டிலும் சட்டச் சீர்திருத்தம் தொடர்பாக செய்வதற்கு இன்னும் அநேகம் உள்ளன. நாம் வலியுறுத்துவது :

1. அடிப்படை உரிமைகளுக்கு மாறான, பெண்களுக்கெதிரான, பாரபட்சம் வாய்ந்த சகல சட்டங்களையும் நீக்கல் அல்லது திருத்துதல். பெண் என்ற அடையாளத்தைப் பாதுகாப்பது என்ற பெயரில் பெண்கள் பாரபட்சமாக நடத்தப்படாதிருப்பதற்கு அரசியலமைப்பு சார்ந்த உத்தரவாதங்கள்.

2. 2005ம் ஆண்டு ஆவணி மாதத்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வீட்டு வன்முறைத் தடுப்பு மசோதா வெற்றிகரமாக செயற்படுத்தப்பட வேண்டும். வீட்டு வன்முறைத் தடுப்பு மசோதா 2001இல் பெண்கள் குழுக்களால் வரைபு செய்யப்பட்டுப் பூர்த்திசெய்யப்பட்டும் உள்ளது. நீதி அமைச்சரினால் அது அடுத்த நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. பாதிப்புற்றோருக்கு குடியியல் சார்ந்த பரிகாரங்களையும், இழப்பீட்டு வழங்கலையும் உள்ளடக்கியதாக, பாலியற் தொந்தரவு தொடர்பிலான சட்டத்தை வலுப்படுத்தல். தனியார்துறை அடங்கலாக சகல தொழில் வழங்குனர்களும், பாலியற் தொந்தரவு தொடர்பிலான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் நடைமுறைகளையும், அது சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

4. சகலரதும் திருமண வயலெல்லையைப் பதினெட்டாக உயர்த்துதல்; சமதன்மையான இனமுறைச் சட்டங்களை அறிமுகப்படுத்துல்.

5. பாலியல் வல்லுறவால், முறைதகாப்புணர்ச்சியால் கருவுற்ற பெண்ணுக்கு உடல், உள/உடல் அல்லது உள ரீதியாக ஆபத்து ஏற்படும் பட்சத்தில் கருச்சிதைவு செய்து கொள்ளச் சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்துதல்.

6. வயது வந்த ஆணோ, பெண்ணோ தன்னினச் சேர்க்கைக்குச் சுயமாக இணங்கும் பட்சத்தில் நவீன சட்டங்களுக்குப் பொருந்தும் வகையில் அது குற்றமற்றது என ஆக்கப்படல்.

7. குற்றம் சாட்டுதலை அடிப்படையாகக் கொண்ட தற்போதய விவாகரத்துச் சட்டங்களில், திருமணமுறிவு என்னும் எண்ணக்கருவை உள்ளடக்கிய சீர்திருத்தத்தைத் துரிதப்படுத்துதல்.

8. இந்த நாட்டில் குறித்தளவு வருடங்கள் வாழ்ந்துவிட்ட பிற தேசத்து கணவருக்கோ மனைவிக்கோ நிரந்தரத் தகுதி வழங்கப்பட வேண்டும். அந்நிய தேசத்தவரான கணவனுக்கும் மனைவிக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும், விண்ணப்பங்களுக்கு செலவேதுமின்றி, குடும்ப ஒற்றுமைக் கொள்கையின் அடிப்படையில் விசா கொடுக்கப்பட வேண்டும்.

9. தற்பொழுது, குறிப்பாக அரச காணி வழங்குதலில் ஆண்களுக்கு சாதகமாயுள்ள அரசகாணி பட்டுவாடாச் சட்டங்களை (மரபுவழிச் சட்டங்களையும்) பாரபட்சமற்றதாக்குதல்.

10. இல்லத்தின் தலைவர்களாக மனைவி, கணவன் எனும் இருவரையும் அங்கீகரித்தல்.

11. பெண்களை அடக்கி ஒடுக்கும் பழமைவாய்ந்த நாடோடிச் சட்டங்களை மாற்றியமைத்து, சிறுவர் விபச்சாரம், பலவந்த விபச்சாரம், சட்டவிரோதமாக ஆட்களை வணிகம் செய்தல் என்பவற்றிற்கு எதிராக சட்டத்தை வலுப்படுத்துவதுடன் அவை தொடர்பான சர்வதேச கட்டளைச் சட்டங்கள், கோட்பாடுகள் என்பவற்றிற்கு ஒத்துப்போகக் கூடிய வகையில் சட்டங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படல்.

12. சட்டம் பற்றியும் தமக்குரிய சட்ட உரிமைகள் பற்றியும் பெண்களுக்கு வழிப்புணர்வை அதிகரிக்கும் பொருட்டு சட்டம் சார்ந்த அறிவூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்படல்.

13. இலங்கையில் பாரபட்சம் வாய்ந்த இனமுறைச் சட்டம், குறிப்பாக இஸ்லாமியச் சட்டம் பற்றி - பெண்களுக்கெதிரான பாரபட்சங்களை அழித்து ஒழித்தலுக்கான அமைப்பினால் (CEDAW) வெளியிடப்பட்ட அறிக்கையைக் குறிப்பாகக் கவனிக்கவும்.

- வீட்டு வன்முறைத் தடுப்பு மசோதாவை நடைமுறைப்படுத்தவும்
- திருமணத்திற்கான வயதெல்லையை ஒரே சீராக்க ஊக்கப்படுத்தவும்
- கருச்சிதைவுக்கான சட்டங்களை மாற்றி அமைக்கவும்

வன்முறை

இலங்கையில் சகல பகுதிகளில் வாழும் அநேக பெண்களும், பெண் பிள்ளைகளும் தொந்தரவுக்குள்ளாதல், தாக்கப்படுதல், பாலியல் வல்லுறவு,முறைதகாப்புணர்ச்சி முதற்கொண்டு சித்திரவதை,'காணாமற் போதல', கொலை செய்யப்படுதல் வரை பலவகையான வன்முறைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளனர் என்பது நன்கு தெரிந்த விடயமாகும். அதகமானவர்கள் இல்லங்களிலும், வேலைத்தலங்களிலும்,பயணம் மேற்கொள்ளும் சூழ்நிலைகளிலும் வார்த்தைரீதியாக,உடல் ரீதியாகச் சகல வகைத் துஷ்பிரயொகங்களுக்கும் பாத்திரமாகின்றனர். இளம் பெண்கள் தற்கொலை செய்யும் விகிதம் உச்சத்தில் உள்ள நாடுகளுள் இலங்கையும் ஒன்றாகும். ஆண்கள் மது,போதைவஸ்துக்கு அடிமைப்படுதலால் ஏற்படும் சமூகப் பிரச்சினைகளையும் பெண்கள் தாங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. யுத்தம், அரசியற் காடைத்தனம், ஆயுதமேந்தலையும் மிருகத்தனத்தையும் தொற்றுவித்திருப்பதன் விளைவாக வன்முறைகள் மேலும் அதிகரித்திருக்கிறது. நாம் பரிந்துரைப்பது:

1. பெண்களுக்கெதிரான சகலவிதமான வன்முறைகளைக் குறைத்துக் கொள்ளும் பொருட்டு மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்களுக்காக,ஊடகங்களால் கூடிய வளங்களைப் பயன்படுத்தலும் விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.

2. சட்டத்தினாலும் வேறுவகையினாலும் கட்டுப்பதுத்தும் முறைகள். உதாரணமாக, மாதர்களையும்,பெண் பிள்ளைகளையும் தாக்கியவர்கள் என்று குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு காவற்றுறை அல்லது இராணுவ அணிகளின் ஆட்சேர்ப்பின் போது இடங்கொடுக்க மறுத்தல், அத்துடன் அவர்களுக்கு ஆறுதல் அறிவுரையும் புனர்வார்வுக்கான வசதிகளும் வழங்குதல்.

3. வன்முறைகளுக்கு ஆளான பெண்களுக்கு அதிகரித்த இலவசச் சட்ட உதவி வசதிகள்.

4. கஷ்டங்களால் உருக்குலைந்த பெண்களுக்கும்,பாலியல் வன்முறைக்குப் பாத்திரமான பெண்களுக்கும் நாடளாவிய ரீதியில் அரசாங்க அனுசரணையில் புகலிடமும் ஏனைய வசதிகளும் வழங்கல்.

5. புகலிடங்கள் அத்துடன் சட்டம்சார், உளம்சார் ஆறுதல் ஆலோசனை-

களை வழங்கும் பொருட்டு அரசாங்க முகவராண்மைகளும்,பெண்கள் நிறுவனங்களும் இணைந்து கூட்டாகச் செயற்படல்.

6. இல்லத்தில் வன்முறை,பாலியல் வல்லுறவைப் புலனாய்வு செய்தல், பாலியல் தொந்தரவு,பால்நிலை சம்பந்தப்பட்ட ஏனைய வன்முறைகள் என்பனவற்றைக் காவற்றுறையினரின் பயிற்சிடிநறியில் ஒரு பகுதியாக உள்ளடக்கல்,பெண்களின் முறையீடுகளை பொறுப்பேற்பதற்கு பயிற்றப்பட்ட பெண்களையும், போதியளவு உட்கட்டமைப்பையும் கொண்ட பிரத்தியேக பணிநிலைகள் ஏற்பாடு செய்து கொடுத்தல்.

7. நீதவான்மார், குற்றவியல் வழக்கறிஞர் ஆகியோருக்கு பால்நிலை தொடர்பான விடயங்கள், குறிப்பாகப் பெண்களுக்கெதிரான வன்முறைப் பற்றிக் கூருணர்வை ஏற்படுத்தக்கூடிய பாடநெறிகளை அதிகரித்தல்.

8. பெண்களைத் தொந்தரவுபடுத்துவோருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பேருந்து சாரதிகளுக்கும், நடத்துனர்களுக்கும் பயிற்சி,முன்னேற்பாடு என்பவை வழங்கக் கூடிய வழிமுறைகளை உறுதிப்படுத்துதல்.

9. பெண்கள் சகலவிதமான வன்முறைகளிலிருந்தும் விடுதலை பெறுவதற்கான உரிமை பற்றி அரசியலமைப்பில் தெளிவான அங்கீகரிப்பு, தனிமையிலோ, பொது இடங்களிலோ ஒரு பெண் வன்முறைக்குப் பாத்திரமாக்கப்படும் பட்சத்தில் தனது அடிப்படை உரிமை மீறல தொடர்பாக ஓர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்வதற்கு ஏதுவாக இருத்தல்.

10. வீட்டு வன்முறை என்ற விடயத்தை நாடு பூராவும் பிரசித்தப்படுத்தல், அத்துடன் வீட்டு வன்முறைத் தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் சார்பாக பிரசாரம் மேற்கொள்ளல் இச்சட்டத்தின் அம்சங்களை மக்கள் மத்தியில் தெளிவாக்குதல்.

11. மருத்துவசேவையினரும், பராமரிப்புச் சேவைக்கான கடமைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் வன்முறை தொடர்புள்ள நிகழ்வுகள் பற்றி அறிவித்தல் வேண்டுமென்பதைக் கடப்பாடாகக் கொள்ளல். அவர்களுக்கு, வீட்டு வன்முறை தடுப்புச் சட்டம் பற்றி விழிப்புணர்வு உண்டாக்கவேண்டும்.

பொருளாதாரம்

ஊழியர்கள் அணியில் பெண்கள் ஓர் முக்கிய பங்கை வகிக்கின்றனர். அநேக துறைகளில் ஆண்களுடன் ஒப்பிடும்போது வேதமன் தொடர்பாகக் காணப்பட்ட பாரபட்சத்தைப் பெண்கள் போராட்டங்கள் மூலம் முடிவிற்குக் கொண்டு வந்துள்ளனர். எனினும், குறிப்பாக,கிராமப்புறத்திலும் பெண்கள் மிகக் குறைந்த வேதனங்களைப் பெறுபவராகவும்,தேர்ச்சி குறைந்தவராகவும் கருதப்படுகிறார்கள். பெருந் தோட்டங்களிலும் தொழிற்சாலைகளிலும் வெளிநாட்டுத் தொழில்களிலும் பெண்களின் மலிவான உழைப்பானது நாட்டின் அந்நிய செலாவணியின் பெரும் பங்கை பெற்றுத் தருகிறது. பெண்களிற்குரிய வேதனற்கள்,தொழில்புரிதலுக்கான மணித்தியால எண்ணிக்கையளவு, தொழிற்சூழல், வாழ்க்கைச்சூழல் என்பனவற்றின் மீது விசெஷக் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ள அதேவேளை- தம்மை ஒழுங்கமைத்துக் கொள்ளும் உரிமை, உடல்நல வசதிகள், குழந்தை பராமரிப்பு நிலையங்கள் மற்றும் அவர்களின் ஏனைய வசதிகளுக்கான உரிமைகளையும் அரசியல்வாதிகள், தொழில் வேலையற்றிருப்போரில் பெண்களெ பெரும்பான்மையினராகக் காணப்படுகின்றனர். வெளிநாடுகளில்,குறிப்பாக மத்திய கிர்க்கில் பெண்கள் சுரண்டப்படுதல்,கடுமையாக நடத்தப்படுதல் பற்றி வெளிப்படுத் தப்பட்டபோதிலும் இது தொடர்பாக ஆற்றவேண்டிய கருமங்களுக்கு இன்னமும் இடமுண்டு. வீட்டுப் பணிப்பெண்கள், முறைசாராத் துறைகளில் பணிபுரியும் பெண்கள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாப்பதற்குச் சட்டங்களோ நிறுவனங்களோ இல்லை. மேலும் தமது வீடுகளிற் பெண்கள் செய்யும் பரந்த வகையிலான வேதனமற்ற பணிகள் பற்றிப் பொருட்படுத்தப்படுவதுமில்லை. நாம் பரிந்துரை செய்வது:

1. தேசிய ரீதியாக ஓர் குறைந்த பட்ச வேதனத்தை வலியுறுத்தி நடைமுறைப்படுத்தல்.

2. விவசாயத்துறையில் தொழில்புரியும் பெண்கள் உட்பட, சம அடிப்படையில் உழைப்பை வழங்கும் பெண்களுக்கு சமமான வேதனம் வழங்குதல்.

3. குறிப்பாக,தாபனமயப்படுத்தலை ஊக்கப்படுத்தாத துறைகளிற் பெண்கள் தொழிற்சங்கம் அமைத்தல்,கூட்டுச் சேர்ந்து பேரம் பேசுதல் என்பவைகளுக்கான உரிமைகளை பலப்படுத்துதல்.

4. தந்தையாருக்குரிய குழந்தை பராமரிப்பு விடுமுறையையும் உள்ளடக்கிய தாகப் பெற்றோருக்குரிய விடுமுறைக் கொள்கையை அங்கீகரித்தல்.

5. தொழில்புரியும் ஸ்தலங்களில்-குறிப்பாக பெருந்தோட்டங்கள், தொழிற்சாலைகள், காரியாலயங்கள் என்பவற்றில் போதிய குழந்தை பராமரிப்பு நிலையங்களையும், குழந்தைகளைக் கவனிக்கக் கூடிய ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தல்.

6. ஏற்றுமதி உற்பத்தி வலயத்திலும்,அவை போன்ற மற்றைய தொழிற்சாலை களிலும் மேம்படுத்தப்பட்ட வசதிகள்,அதாவது, தொழிலும் வேதனமும், தொழிற்சங்கங்களையும் கூட்டுப் பேரம் பேசுதலையும் அங்கீகரித்தல், சுயவிருப்புடனான மேலதிக நேர வேலை,தகுந்த போக்குவரத்தும் தங்குமிடங்களும், இரவு வேளைகளில் கூடிய எண்ணிக்கையில் பேருந்துகள் ஈடுபடுத்தப்படுதல்.

7. புலம்பெயர்ந்து தொழில்புரியும் பெண்கள் தொடர்பாக:ஆட்சேர்ப்பிற்கான குறைந்த பட்சத் தரங்கள்,தொழில் புரிவதற்கான நிபந்தனைகள், தாயகத்திற்குத் திருப்பியனுப்புதல் என்பவை உள்ளடக்கப்பட்ட தரமான தொழில் ஒப்பந்தங்களை வலியுறுத்தி நடைமுறைப்படுத்தும் பொருட்டு அரசாற்கத்துக்கும் பெண்களின் சேவைகளை ஏற்றுக் கொள்ளும் நாடுகளுக்கும் இடையே இருதரப்பு ஒப்பந்தங்களை ஏற்படுத்துதல்; கூடிய எண்ணிக்கையில் தொழில் அலுவலகங்களையும் நலன்புரி அலுவலகங்களையும் நிறுவுதல்; புலம்பெயர்ந்த தொழிலாளர்களை ஏற்றுக்கொள்ளுதல் நாடுகளில் உள்ள தொழிலாளர்களுக்கு இலவச சட்ட உதவியும்,ஆறுதல் அறிவுரைகளும் வழங்கல், சமூகக் காப்புறுதித் திட்டம் ஒன்றையும் ஏற்படுத்தல்.

8. வீட்டு வேலைக்காரரை பதிவு செய்தலோடு,அவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட வசதிகள், பாதுகாப்புகள் வழங்கல்: ஒழுங்காக்கப்பட்ட வேலை நேர மணித்தியாலங்கள்,குறைந்த பட்ச வேதனம் நிர்ணயித்தல், வேலையின் பெறுமானத்திற்கேற்ப வேதனம் வழங்கல்; மாதாந்த,வருடாந்த விடுமுறைகள்; உடல்நல வசதிகளுக்கான ஏற்பாடுகள், மகப்பேற்று ஓய்வு நாள்கள், தொழிலாளர் சேமலாப நிதித் திட்டம்(EPF).

9. இல்லங்களில் மேற்கொள்ளப்படும் கைத்தொழிலிலும் சுயதொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ள பெண்களின் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கும் முகமாக, தொழிற்சட்டங்களை விரிவுபடுத்திச் சர்வதேச தொழில் அமைப்பின் (ILO) சாசனத்தை உறுதிப்படுத்தி செல்லுபடியாக்குதல்.

10. பெண்கள் ஓய்வு பெறுவதற்கான கட்டாய வயதெல்லையை 55 இலிருந்து 65ஆக உயர்த்துதல்.

11. 'விதவைகளினதும் அநாதைகளினதும்' ஓய்வூதியத்தை, அவர்களின் ஆதரவில் வாழும் மற்றைய பெண்களுக்கும் உரித்தாக்குதல்.

12. வேலையற்ற, குடும்ப ஆதரவற்ற, விவாகம் செய்யாத என்ற வகையில் தனிமையுற்ற பெண்கள்,வயது முதிர்ந்த பெண்கள் ஆகியோருக்கு விசேஷ ஏற்பாடுகளையும், திறன்களை மேம்படுத்துவதற்கான பயிற்சிகளையும் வழங்குதல். கூடுதலான வயோதிபர் இல்லங்கள் அமைத்தலுக்கு முதலுரிமை கொடுக்கப்பட வேண்டும்.

13. குடும்பப் பொறுப்புகளுக்கு பெண்கள் தலைமைத்துவம் வகிப்பதை ஏற்றுக்கொள்ளுதலும், அவர்களின் பிரத்யேகமான விடயங்களைக் கவனிப்பதற்கான ஆக்கபூர்வமான கொள்கைகளை உருவாக்குதலும்.

சுனாமி

சுனாமிப் பேரழிவு, பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள பெண்கள் மீது ஏற்படுத்திய பாரிய தாக்கமானது குடும்ப உறுப்பினர்களது இறப்பைச் சமாளித்தல், இடப்பெயர்வு, தொழில் மற்றும் இல்லங்களை இழத்தல், வன்முறைக்கு முகம்கொடுக்க நேரிடல் ஆகியவற்றை உள்ளடக்கின்றது.

இப்பேரழிவினால் பாதிப்படைந்த பெண்கள், சிறுமிகளது உரிமைகள் உறுதிப்படுத்தப்படுவதற்காக, சுனாமிக்குப் பின்னரான அனைத்து நடவடிக்கைகளும் மிகக் கூர்மையாக அவதானிக்கப்பட வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

சுனாமிக்குப் பின்னரான கட்டமைப்புகள் உருவாக்கப்படும்போது மாவட்ட, பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களில் ஆண், பெண் சமத்துவம் பேணல் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

இது - நிலம், வீடு மற்றும் ஏனைய நட்டயீடுகள் பகிரப்படும்போது ஆண், பெண் இருசாராரும் உரித்துடையதாக இருத்தலை கருத்திற்கொள்ளல், விதவைகள், தனித்த பெற்றோர், அனாதைகளது நலன், தொழில்/கல்வி மற்றும் பயிற்சி வழங்களில் சிறப்புக் கவனம் எடுத்தல் என்பவற்றையும் உள்ளடக்க வேண்டும்.

ஊடகம்

பெண்களைக் கீழ்மைப்படுத்தும் ஆணாதிக்க அமைப்புகளும் மனப்பாங்குகளும் இலங்கையில் இன்னமும் ஓயாது தொடர்கின்றன. விசெஷமாகத் தேர்தற் காலங்களில் ஊடகத்துறையில் இதை நாம் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கிறது. பெண் அரசியல்வாதிகள் பற்றிய ஆபாச வசைகள் பரவலாக இடம்பெறுதல் விசித்திரமல்ல. ஆயினும் பெண்களைப் பற்றிய சாதகமான படிமங்களை உருவாக்கவல்ல, ஆற்றல்மிகு கருவியாக பத்திரிகைகள், சஞ் சிகைகள், வானொலி, தொலைக்காட்சி என்பன விளங்கமுடியும். ஆனால், துரதிர்ஷ்ட வசமாக விளம்பரங்களில், கேலிச்சித்திரங்களில், கட்டுரைகளில், ஆசிரியர் தலையங்கங்களில் பால்வாதம் இன்னமும் நிலவிவருகிறது. அநேக தொலைக்காட்சித் தொடர்களில் இன்னமும் பெண்களுக்கெதிரான வன்முறைகளும், பாலியல் மனப்பாங்குகளும் சித்தரிக்கப்படு கின்றன. மேலும், இவை பெண்களை மனைவி,தாய் அல்லது பாலியல் காட்சிப் பொருட்களாகவே எடுத்துக் காட்டுகின்றன. மேலும், ஊடகத் தயாரிப்புத் துறைகளில் குறிப்பாக, தீர்மானம் எடுக்கும் மட்டங்களில் பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதில்லை. நாம் பரிந்துரை செய்வது:

1. ஊடகத்துறைகளில் விசெஷமாகத் தயாரிப்பு, தொகுப்புத் துறைகளில் பெண்களுக்கு அதிக பயிற்சியும் தொழிற் வாய்ப்பும் வழங்கல்.
2. பெண்கள் பற்றிய சாதகமான மனப்பாங்கை ஊக்கப்படுத்தவும், ஊடகங்களில் பால்வாதத்தையும், பெண்களைப் படியாக்கம் செய்வதை எதிர்த்துப் போராடவும் - பெண்கள கல்வி ஆய்வு நிறுவனத்தால்(WERC) ஊடகவிய லாளருக்கெனத் தயாரிக்கப்பட்ட ஒழுக்கநெறிக் கோவையை நடைமுறைப்படுத்தல்.
3. பால்நிலைக் கூருணர்வூட்டும் நிகழ்ச்சித் திடடங்களை ஊடகவியலாளருக்கு வழங்குதல்.
4. மும்மொழிகளிலுமுள்ள பத்திரிகைக் கட்டுரைகள், விளம்பரங்கள், கேலிச் சித்திரங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், குறிப்பாகத் தொலைக்காட்சி நாடகங்கள் என்பவற்றில் பால்வாதத்தைக் கண்காணிக் கவும், அம்பலப்படுத்தவும் ஓர் இடைவிடா ஊடகம் சார் விழிப்புநிலைக்கு ஆதரவளித்தல்.
5. ஊடகத்துறையில் பால்வாதத்தை எதிராகச் செயற்படுதலில் கூடிய அக்கறை காட்டும்படி பத்திரிகை ஆசிரியர்களையும், ஊடகவிய லாளர்களையும், தொலைக்காட்சி,வானொலி,முகாமைத்துவம், விளம்பர முகவராண்மைகள், பத்திரிகைக் கண்காணிப்புச் சபை போன்ற வற்றையும் அறிவுறுத்தி இணங்க வைக்கும் வகையில் பிரசாரங்களை மேற்கொள்ளல்.

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தினால் (WERC) பிரசுரிக்கப்பட்ட பால்நிலைப் பிரதிநிதித்துவத்திற்கான ஒழுக்கநெறிக் கோவையிலிருந்து பெறப்பட்ட சாரக் குறிப்பு

விளம்பர முகராண்மைகள்,வர்த்தக விளம்பர தயாரிப்பு நிலையங்கள் என்பவை தொடர்பாக ஒலிபரப்புக் கொள்கை தயாரிக்கும் பொருட்டு வழிகாட்டல்கள் வரைவதற்கு தொலைக்காட்சி நிலைய முகாமையாளருக்கு துணைபுரியும் வகையில் இவ்வழிகாட்டல்கள் திட்டமிடப்பட்டுள்ளன. இதன் நோக்கம், விளம்பரங்களிற் பெண்கள் சாதகமான வகையிலும் யதார்த்தமான வகையிலும் உருவகப்படுத்தப்படுவதை ஊக்குவிப்பதாகும்.

- பெண்கள் தரங்குறைக்கப்படக் கூடியவர்களாகவும், ஆண் பார்வையாளர்களின் கவனத்தைக் கவரக் கூடிய விதத்தில், பாலியல் பொருட்களாக,வர்த்தகப் பொருட்களாக பிரயோகிக்கப்படுவதையும் தவிர்த்துக் கொள்ளவும்.
- பெண்களுடன் தொடர்பல்லாத உற்பத்திப் பொருட்களுக்கான விளம்பரங்களில் பெண்களைப் பயன்படுத்திக் கொள்ளுவதைத் தவிர்க்கவும்.
- அடங்கியொடுங்கி வாழ்கின்ற வகிபாகங்கள், மந்தபுத்தியான வகிபாகங்கள் ஆகியவை பெண்களுக்கு இயல்பானவையெ எனத் தொடர்புபடுத்தும் வகையில் பெண்களை அப்பேர்ப்பட்ட பாத்திரங்களில் உருவகப்படுத்திக் காட்டுவதைத் தவிர்க்கவும்.
- பெண்களுக்குரிய முக்கியமான அல்லது ஒரேயொரு பாகம் இல்லப் பொறுப்பு மாத்திரமே எனத் தொடர்புபடுத்தும் வகையில் உருவகப்படுத்திக் காட்டுவதைத் தவிர்க்கவும். மாறாக, அவர்களால் ஆற்றக்கூடிய பல்வகைப்பட்ட பாத்திரங்களை உருவகப்படுத்திக் காட்டுதலை ஊக்குவிக்கவும்.
- பெண்கள் சமூகத்தில் ஆற்றும் ஏனைய வகிபாகங்களை விட இல்லத்தரசி என்ற பாத்திரமே முதன்மை முக்கியத்துவமானது என்பதை உருவகப்படுத்திக் காட்டுதலைத் தவிர்க்கவும்.
- குடும்பத்தில் ஏனைய அங்கத்துவர்கள் ஆசுவாசமாகப் பொழுதைப் போக்குகையில் பெண்கள் வீட்டுப் பணிகள் மேற்கொள்ளுவதாக உருவகப்படுத்திக் காட்டுவதை தவிர்க்கவும்.
- பிள்ளைகள் விளையாடுவதாக உருவகப்படுத்தும்போது, ஆண் - பிள்ளைகள் ஆதிக்கம் செலுத்தும் பாத்திரங்களிலும், பெண் - பிள்ளைகள் வருங்கால இல்லத்தரசி/தாய்க்குரிய பாத்திரங்களிலும் உருவகப்படுத்திக் காட்டுவதைத் தவிர்க்கவும்.

உடல்நலம்

வாழ்க்கை வயதெல்லை உயர்வாக இருத்தல் பற்றியும், தாய் சேய் மரணவிகிதம் குறைவாக இருத்தல் பற்றியும் நாடு பெருமையாகப் பேசிக் கொள்கின்றபோதிலும், இலங்கையின் சில பகுதிகளில் நிலவும் உடனலம் தொடர்பான பிரச்சினைகள் ஆழ்ந்த கரிசனைக்குக் காரணமாக இருக்கின்றது. இலங்கையில் சுகாதார வசதிகளையும்,சேவைகளையும் குறைக்கவேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்படும்போது, அது பெண்களையும், பெண்-பிள்ளைகளையும் பெரிதும் பாதிக்கிறது. கிராமப் புறப் பெண்களும், குறைந்த வருமானம் பெறும் பெண்களும் சுகவீனம் என்னும் பெருஞ்சுமையைத் தாங்கிக் கொள்ள வேண்டியவராகின்றனர். அத்துடன் குறிப்பாக, தொழில் புரியும் பெண்கள் வெளியே சென்று தொழிலையும்,இல்லத்தில் இருந்து வீட்டுப் பணிகளையும் செய்வதால் இரட்டைச் சுமைகளை அவர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. நாம் வலியுறுத்துவது:

1. பெருந்தோட்டங்கள், மோதலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள், வறுமைப்பட்ட கிராமப் புறங்கள் நகர்ப்புறங்கள், இடம்பெயர்ந்தோருக்கான நலன்புரி நிலையங்கள் என்பவற்றில் வாழ்கின்ற பெண்கள், பெண்-பிள்ளைகளிடையெ தாய் சேய் இறப்பு விகிதத்தையும், நோயுறும் நிலைக்கான விகிதத்தை யும், இரத்த சோகை, நிறை போஷக்கின்மை என்பவற்றின் விகிதத்தையும் குறைத்தல்.

2. உபகரணங்கள் முபுமையாகக் கொண்ட 'பெண்களுக்கான நலன்புரி மருத்துவ நிலையங்களை' நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்தல். மேலும் ஒழுங்கான அடிப்படையில் புற்றுநோய் சோதிப்பதற்கான நுண்ணாய்வு மேற்கொள்ளுவ தற்கும், புற்றுநோய் வகைகளை படமிட்டுக் காண்பதற்கான வசதிகளையும், பெண்களைப் பாதிக்கும் ஏனைய நோய்களைப் பரிசோதிக்கவும், சகல அரசினர் வைத்தியசாலைகளிலும் ஏற்பாடுசெய்து கொடுத்தல்.

3. தெழில் வழங்குனர்களுக்கு பெண்களின் உடனலனுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளுதல். அதாவது முறையான முதலுதவி,உணவுச்சாலை, கழிப்பறை வசதிகள் என்பனவற்றை பெண்களுக்கு ஏற்பாடுசெய்து கொடுத்தல்; அத்துடன் தொழ்ற்றுறை சார் உடல்நலன், பாதுகாப்பு என்பவைக்கான விதிகளையும் கடுமையாகக் கடைப்பிடித்தல்.

4. இனவிருத்தி உரிமைகளை,சகல பெண்களும் அனுபவிக்கக் கூடிய விதத்தில் பிரசாரம் மேற்கொள்ளல். குடும்பக் கட்டுப்பாட்டு

முறைகளை தேர்ந் தெடுப்பதில், இலகுவாக அணுகக் கூடியதும் நன்கு அறியப்பட்டதுமான தேர்வுகள் அவர்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்துதல்.

5. பெண்களிடையே (HIV/AIDS) எயிட்ஸுக்கான தடுப்பு முறைகளை உறுதி யாகக் கடைப்பிடித்தல்.

6. அடிப்படைச் சேவைகள், சுகாதார வசதிகள், போக்குவரத்து என்பனவற்றை வறிய ஒற்றைப் பெறறோர் உள்ள குடும்பனத்தினரும் முதியோரும் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் சலுகைகள் வழங்கல்.

7. 55 வயதுக:கு மேற்பட்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் கழிவு விலையில் மருந்துவகைகள் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதியை ஏற்படுத்தல்.

8. மன அழுத்தம் அல்லது நெருக்கடிச் சூழ்நிலையில் இருக்கும் பெண்களுக்கு ஆறுதல் ஆலோசனை வழங்குவதற்கான திட்டம் அமைத்தல், யுவதிகள் மத்தியில் உயர் எண்ணிக்கையிற் காணப்படும் தற்கொலை வீதமுட்பட ஏனைய மனநோய் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி கூடிய ஆய்வும் செயல் நடவடிக்கையும் மேற்கொள்ளல்.

9. பெண்களுக்கெதிரான வன்முறையை ஓர் உடனலப் பிரச்சினையாக அணுகி அதற்குரிய பரிகாரங்களையும் தடுப்பு நடவடிக்கைகளையும் சுகாதாரம் தொடர்பான கொள்கையுடன் ஒருங்கிணைத்தல்.

• குடும்பக் கட்டுப்பாடும் இனவிருத்தி உரிமைகளும்
எயிட்ஸ் தடுப்பும் பற்றிய அறிவூட்டல்
• போஷாக்கின்மையைக் குறைத்தல்
• தாய் சேய் மரண விகிதத்தைக் குறைத்தல்

சார்பாக பிரசாரம் மேற்கொள்ளவும்.

கல்வி

இலங்கையில் பெண்களினதும, பெண்- பிள்ளைகளினதும் கல்வி, எழுத்தறிவு என்பவற்றிற்கான மட்டம் சாதகமான நிலையில் அமைந்துள்ளது. ஆயினும் நாட்டில் எழுத்தறிவுவற்ற பகுதிகள் இன்னமும் உள்ளன. குறிப்பாக பெருந்தோட்டற்களில் உள்ள பெண்கள், குறைந்த வருமானமுள்ள கிராம,நகர்ப்புறங்களிலுள்ள பெண்கள் ஆகியோரிடையெ எழுததறிவு குறைவாகவே இருக்கின்றது. அநேக சந்தர்ப்பகளில் பெண்கள் பற்றிய எதிர்மறையான மனப்பாங்குகள் பாடசாலைகளில் மட்டுமல்லாது அனைத்து மொழிப் பாடப்புத்தகங்களிலும் கூட ஊக்குவிக்கப்படுகின்றன. நாம் வலியுறுத்துவது:

1. முதல்நிலை, இடைநிலைக் கல்வி மட்டங்களை மேம்படுத்தல். பெருந் தோடடத்தைச் சார்ந்த பெண் - பிள்ளைகள், வறிய கிராமப்புற, நகர்ப்புறப் பெண் - பிள்ளைகள் ஆகியோருக்கு வாய்ப்பு நலன்களை ஏற்படுத்திக் கொடுக்கும் பொழுது பால்நிலை பாரபட்சம் அகற்றப்படல்.

2. பெண்- பிள்ளைகளுக்கு 16 வயதுவரை கட்டாயக் கல்வியை நாடளாவிய ரீதியில் வலியுறுத்திகச் செயற்படுத்தல்.

3. பாடநூல்களில் பால்நிலை பாரபட்சம், பால்வாதம், இனவாதம் இடம்பெறுதல் பற்றி கூர்ந்து கண்காணித்தல். மேலும், பால்நிலைக் கூருணர்வை ஏற்படுத்தக் கூடிய விடயங்களை பாடநூல்கள்,பாடநெறிகளில் கூட்டிணைத்துச் சேர்த்துக் கொள்ளல்.

4. வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்பம்,விஞ்ஞானம்,நவீன தொழில்நுட்பங்கள்,முகாமைத்துவம் என்பவைக்கான பயிற்சித் திட்டங்களுக்குப் பதிவு செய்யும்போது பால்நிலை சமமின்மையைக் குறைத்தல்.

5. எழுத்தறிவற்ற பெண்கள், நிறுவனங்களின் சிக்கனப்படுத்தல் நடவடிக்கைகளால் வேலை நீக்கப்பட்ட பெண்கள்,தொழிலற்ற பெண்கள் ஆகியோருக்கு முதியோர் கல்வி, நடைமுறை சார்ந்த எழுத்தறிவு, திறன் வளர்ச்சிக்கான பயிற்சி என்பவை தொடர்பாக செயற்றிட்டங்களை உருவாக்கல்.

6. ஆசிரியர், பாடசாலை மாணவர், பல்கலைக்கர்க மாணவர் ஆகியோருக்கு பால்நிலை சமத்துவம் தொடர்பான வாதவிடயங்கள் பற்றிய கூருணர்வை

ஏற்படுத்தல்.

7. பால்நிலை உள்ளடக்குதல், அத்துடன் பல்கலைக்கர்கங்களில் பால்நிலைக் கல்வித் துறைக்கான பாடத்திட்டங்களை விரிவுபடுத்தல்.

8. யுத்தத்தால் இடம்பெயர்ந்த பெண்கள்,யுத்தவிதவைகள் ஆகியோருக்கு திறன்களை மேம்படுத்துவதற்கான பயிற்சியை வழங்குதல்.

பண்பாடும் சமூகமும்

அநேக சந்தர்ப்பங்களில் பெண்கள் அடக்குமுறை வாய்ந்த சமூக வழக்கங்களால் பாதிக்கப்பட்டமைக்கு பண்பாடு, மரபு, சம்பிரதாயச் சட்டம் என்பவை சாடடாகக் காட்டப்பட்டுள்ளது. படிநிலையையும், அசமத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்ட சாதி முறையும். பெண்களை ஓர் 'சுமையாக' நோக்கும் சீதன-முறை போன்ற பழங்கால நிலமானிய சமூகமுறையின் எச்சசொச்சங்களும் இவற்றுள் அடங்கும். இல்லங்களிலும் சமுதாயத்திலும் சட்டத்துறையிலும் நிலவிவரும் ஆண் தலைமைத்துவ முறைமையானது பெண்களுக்கெதிரான பாரபட்சங்கள்,ஆணாதிக்கம், மகன் சார்பான முந்துரிமை போன்றவற்றிற்கு வழிவகுத்துள்ளது. பெண்களுக்கெதிரான பல சமமூகத் தடைக்கட்டுகள்,மூட நம்பிக்கைகள்,எதிர் மறையான மனப்பாங்குகள் என்பவை இன்னமுமெ இருந்து வருகின்றன. நாம் வலியுறுத்துவது:

1. பெண்களுக்கு எதிராகப் பாரபட்சம் காட்டும் ஏற்பாடுகளை இல்லாதொழிக்கும் பொருட்டு சகல மரபு வழிச் சட்டங்களையும் பொதுச் சட்டங்களையும் திருத்தியமைத்தல்.

2. பெண்களுக்கும், பெண்- பிள்ளைகளுக்கும் கேடு விளைவிக்கக் கூடிய சமூக வழக்கங்களை ஊக்கப்படுத்தாதிருத்தல்.(உதாரணம்:- கன்னித்தன்மை யைப் பரிசோதித்தல், விதவைகள் பற்றிய மனப்பாங்கு, பெண்ஞறுப்பை உருச்சிதைத்தல்).

3. பரம்பரைச் சொத்தில் மகனுக்கும், மகளுக்கும் சம பங்குரிமை. சீதனம் கொடுத்தலையும், வாங்குதலையும் சட்டத்திற்கெதிரானதாக்குதல். அரச அனுசரணயுடன் மேற்கொள்ளப்படும் குடியமர்த்தல் திட்டங்களில் சம அடிப்படையிலான வாரிசு உரிமை.

4. பால்வாதம் வாய்ந்த சமூக பழக்கவழக்கங்களை எதிர்த்துப் போராடும் பொருட்டு வெகுஜன ஊடகங்கள், அறிவூட்டல் நடவடிக்கைகள் ஊடகப் பிரசாரம் மேறகொள்ளுதல்.

5. மதுபானம், போதைவஸ்து நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தல்.

6. பெண்கள் வலையமைப்புகளினூடாக மத, இன ஒத்திசைவை ஊக்குவித்தல்.

துணை நடவடிக்கைகள்

1. சகல பரிந்துரைகள்,சீர்திருத்தங்கள் என்பவற்றை நிறைவேற்றுவதற்கும், பெண்களுக்கான கல்வி, சுகாதாரத் துறைகளுக்கும் கூடிய அளவு செலவீடு செய்வதன் பொருட்டும் போதிய அளவு வளங்களையும், நிதி ஒதுக்கீடுகளையும் ஏற்பாடு செய்தல்.

2. பெண்கள் தொடர்பான பரிந்துரைகள்,சீர்திருத்தங்கள் என்பவற்றின் இலக்குகளை நிறைவு செய்வதன் பொருட்டு, அவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து,ஓர் காலவரையறை அட்டவணையையும் அமைத்து சம்பந்தப்பட்ட பொது, தனியார் அமைப்புகளுக்கு வழங்குதல்.

3. சுயாதீனமாக இயங்கும் பெண்களுக்கான தேசிய ஆணையம் ஒன்றை ஸ்தாபித்தல்,பாரபட்சம் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கும்,அறிவூட்டற் செயற்றிட்டங்களை நடத்தவும், வழக்காடுவதில் ஈடுபடவும், ஆய்வுகளைத் துவக்கி வைத்து அவற்றை மேற்கொண்டு நடத்தவும் அது அதிகாரத்தைக் கொண்டிருத்தல்.

4. பெண்கள் விவகார அமைச்சு தொடர்பாக: பால்நிலை சம்பந்தமான வாதவிடயங்களைக் கையாளுதல் பற்றி அமைச்சு அதிகாரிகளுக்கு மேலும்பயிற்சி வழங்குதல்.

5. கொள்கைகளும் செயற்றிட்டங்களும் எவ்வாறு சகல சமூகங்களைச் சார்ந்த பெண்களைப் பாதித்துள்ளது என்பதை மதிப்பீடு செய்யும் பொருட்டு, தேசிய திட்டமிடல் இலாகாவில் பால்நிலையின் விளைவை மதிப்பீடு செய்வதற்கான குழு ஒன்றை நிறுவுதல், அரசாங்கத்தின் கொள்கைத் திட்டமிடல், நடை முறைப்படுத்தல் எனும் நடவடிக்கைகளின் சகல மடடங்களிலும் பால்நிலை விழிப்புணர்வு,சமத்துவம் என்பவை இணைக்கப்பட்டு அவை முழுமை யாக்கப்படல், சகல அமைச்சுகளிலும் பால்நிலையைக் குவிமையப்படுத்தக் கூடிய வகையில், பால்நிலை சம்பந்தமான வாதவிடயங்களை கையாளுவதில் பயிற்சி பெற்றவர்கள் பணிபுரியும் விசெட பணிநிலைகளை நிறுவுதல்.

6. பால்நிலை சார்ந்த ஒருங்கிணைக்கப்படாத தரவுகள் தொடர்பாக: பொருளாதாரத்திற்கும் வீட்டுப் பொறுப்புகளுக்கும் பெண்களாற்றும் பங்களிப் பானது குறைமதிப்பீடு செய்யப்பட்டிருப்பதன் காரணமாக பொருளாதார, சமூகப் புள்ளிவிவரங்களில் இருக்கும் இடைவெளிகளைக் கண்டு நிரப்புதல்.

7. பெண்கள் சம்பந்தமான வாதவிடயங்கள் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களிடையெ ஊக்குவித்தல். 1995இல் பீஜிங்கில் நடைபெற்ற பெண்களுக்கான சர்வதேச கருத்தரங்கில் வெளியிடப்பட்ட செயற்பாட்டுக்கான கொள்கை அறிக்கையை நடைமுறைப்படுத்தல்.

8. பெண்களின் நடைமுறையிலிருக்கும் குறைகளையும், முறைப்பாடுகளையும் விசாரிப்பதற்கு ஒரு குறை நிவர்த்திப் பெண். (Ombudswoman)

BOOKS & JOURNALS ON GENDER AND POLITCS

Gender and Politics in Srilanka
Preferring Women
Mario Gomez and Shyamala Gomez

Women and Governance in Srilanka
Kishali Pinto Jayawardena and Chulani Kodikara

Women and Governance in South Asia
Re-imaging the State
edited by Yasmin Tambiah

Women in Post-Independence SriLanka
edited by Swarna Jayaweera

Casting Pearls-The Women's Franchise
Moverment in Srilanka
Malathi de Alwis and Kumari Jayawardena

Cat's Eye-A Feminist Gaze on Current Issues
edited by Malathi de Alwis

Women & Politics
edited by Morina Perera & Rasika Chandrasekera

Feminists Under Fire - exchanges across war zones
edited by wenona Giles, Malathi de Alwis, et al

Negotiating Household Politics
edited by Sepali Kottegoda

Feminism & Nationalism in the Third world
edited by Kumari Jayawardena

Women & the Nations Narrative
edited by Neloufer de Mel

பெண்களின் கொள்கை விளக்க அறிக்கை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது :

- இலங்கைப் பெண்களின் அரசசார்பற்ற நிறுவனங்களின் வட்டம்.
- பெண்களுக்கான ஆராய்ச்சி நிலையம் (CENWOR)
- முஸ்லிம் பெண்கள் செயல் ஆராய்ச்சி முன்னணி
- பெண்களும் ஊடகமும் கூட்டமைப்பு
- பெண்கள் கல்வி ஆய்வு நிலையம் (WERC)
- பெண்ணின் குரல்
- காந்தா சக்தி
- இனத்துவத்துவக் கல்விக்கான சர்வதே நிலையம் (ICES) - பெண்களுக்கான செயற்திட்டம்
- உதவி தேடும் பெண்களுக்கான அமைப்பு (WIN)
- சமூக விஞ்ஞானிகள் சங்கம் - பால்நிலை மையம்
- சமாதானத்துக்கான பெண்களின் கூட்டமைப்பு
- இலங்கையின் அன்னையரும் புதல்விகளும்

பெண்களின் கொள்கை விளக்க அறிக்கை 2004 பிரதி-களைப் பெற்றுக் கொள்ளத் தொடர்பு கொள்ளவும்:

பெண்களின் அரசியல் வட்டம்,
12, சுலைமான் ரெறஸ்,
கொழும்பு - 5.
தொலைபேசி : 2501339, 2504623, 2586400
மின் அஞ்சல் : ssa@eureka.lk